செய்தித் தாளாகப் பதிவு பெற்றது வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அச] யாழ்ப்பாணம்- விரோதிகிருது ஞு பங்குனி மீ உரு உ வெள்ளிக்கிழமை (7-4-1972) [இலக்க

# பரிதாபி வருஷம்

பரிதாபி வருஷம் 13-4-72 வியாழக்கிழமை முற்பகல் 9 மணி 25 நிமிடமளவில் பிறக்கின்றது. இப் புண்ணிய வேளையில் யாவரும் மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து தூய வஸ்திரங்களை யணிந்து விநாயகர் முதலிய இஷ்ட தெய்வங்களை வழிபட்டு வீடுகளில் சூரிய பொங்கல் செய்து பெரியோர்களை வணங்கி அவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெறக் கடவர். இன சன பந்துக்களுடன், உறவாடி மங்கலமாக வாழ்க்கையை ஆரம்பித்தல நலம். ஒவ்வொருவரும் தத்தம கடமைகளைத தாழ்வெனுந்தன்மையுடன் இறைவனுடைய திருவடியை மறவாதுசெய்யச் சங்கற்பித்துக் கொள்ளுதல் வேண்டும். பொருளாதார நெருக்கடியும் அரசியல் விவாதங்களும் மனக் கஷ்டங்களும் நிறைந்துள்ள காலமாகவிருக்கும் வேளையில் இறைவன் திருவடியை மறவாதிருக்கப் பழகிக் கொள்ளுதல வேண்டும. திருவருள வழிகாட்ட வாழ்வை நடத்துதல் எங்களுக்கு இன்பத்தைத் தரும்.

உற்கை தரும் பொற்கைபோல்
உண்மைப் பின்
நிற்க அதுவே அருளார் நிலே.

உ
திருச்சிற்றம்பலம்

பேராயிரம்பரவி வானோரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா
அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமுந் தந்திரமும்
மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான்
தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண்
சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு
வேளூ ரானைப்
போற்றுதே ஆற்றநாள்
போக்கி னேனே

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசுசுவாமிகள்.

## திருக்குறள் THE GREAT KURAL

### பொருட்பால்

[யாழ்ப்பாணத்து, நல்லூர் சிவபக்தமாமணி திரு ச. சூரசங்காரன் L L B (Lond) நியாயதுரந்தரர், அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள உரைததொகை' எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.
— ஆசிரியர்.

அதிகாரம் 86 புல்லறிவாண்மை - Conceitad Folly
குறள் 848 (முற்றேடர்— 12)

ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

1. புல்லறிவாளன் தனக்கு நல்லனவற்றை அறிவுடையார் செய்யச சொன்னாலும் செய்யான. அதுவுமன்றித் தானும் நல்லவை யாவை என்று அறியமாட்டான். அந்த உயிர் உடலை விட்டுப் போகும வரை உலகிறகு பெறுதற்கரிய தொரு நோயாகும்.

1 The stupid who would not listen to good counsel of the wise regarding things of great benefit to him and does not himself know to find them out is a dire and unbearable disease to the world till his life departs from his body.

2 நல்லதைச் செய்யும்படி பிறர் சொன்னாலும் செய்யாதவனாய், தானும் நல்லது இது என்று அறியமாட்டாதவனாய் உள்ள புல்லறிவாளனின அந்த உயிர் நீங்கும்அளவும அவன் விடாது அனுபவிக்கும ஓர் நோயாம.

2. The wretched life of the stupid who listens not to good counsel by others and does not himself know what is good for him is all one plague he has to suffer continuously till it departs.

3 பிறர் சொன்னாலும் செய்யமாட்டான்; தானாகவும அறியமாட்டான்; அத்தகைய புல்லறிவாளன் உயிர் போமளவரை தனக்கும பிறர்க்கும் ஓர் நோய் போன்றதாகும.

3. The wretched life of the stupid who neither listens to good counsel nor knows for himself what is right is a plague to others and to himself even unto the day of his death.

முதலாவது உரை பரிமேலழகர் உரையையும், இரண்டாவது உரை காலிங்கர் உரையையும் மூன்றாவது உரை நாமக்கல உரையையுந் தழுவுவன. புல்லறிவாளனை உயிர் நோய் என்று உயர் திணையை அஃறிணையாகக் கூறியது செறல் பற்றிய வழுக்கு. இழிவு பற்றியதாகக் கொள்ளினும் அமையும். (நன்னூல்: 378, 379) (வளரும்)

## ஸ்ரீ காமாக்ஷியம்பாள் மகோற்சவம்

வண்ணார்பண்ணை, மருதடி, ஸ்ரீ காமாக்ஷியம்பாள் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் பரிதாபி வருஷம் சித்திரை மீ 2-ம் நாள் (14-4-72) வெள்ளிக்கிழமை துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி (27-4-72) இரதோற்சவமும், (28-4-72) தீர்த்தோற்சவமும் (29-4-72) பூங்காவனஉற்சவமும் நடைபெறும்.

## சிவச் செல்வி மலேசியா விஜயம்

சிவனது பெருமையை உலகில் பரப்புவதே தமது தொண்டாகக்கொண்டுள்ள சிவச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி யவர்கள் இரண்டாவது முறையாக மலேஷியாவுக்குச் சென்று சைவ சமய விரிவுரைகள் நிகழ்த்தவுள்ளார்கள்.

சிலாங்கூர் தமிழர் சங்கத்தின அழைப்பை ஏற்று ஆங்கு செல்லும் அம்மையாருக்கு தெல்லிப்பளை துர்க்கை யம்பாள் ஆலய வழிபாட்டுத தொண்டர்கள் நல்லாசி கூறி வழியனுப்பி யுள்ளார்கள் 6-4-72 இல் அவர் இங்கிருந்து புறப்பட்டுக் கொழும்பிலிருந்து 8-4-72 கோலாலம்பூருக்கு விமானமூலம செலவார்கள்.

## புத்தாண்டு வளமாய்ப் போலிக!

—"இறை ஒளி"—

அரிதான இவ்வாழ்க்கை ஆனநெறி ஓங்கப்
பெரிதாகும் சீர்சைவம் பேணல் — பரிதாபிப்
புத்தாண்டு வளமாய்ப் போலியவரன் றெண்டேமேல்
சித்தாந்தம் ...டும் சிறப்பு

## அகில இலங்கை
# திருநெறிய தெய்வீக மகாநாடு

[திருமுறைப் பெருவிழா 1972]

நல்லை, ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஷை மகாநாடு நடைபெறும்.

பன்னிரு திருமுறை ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டி முதியோர்களுக்கும், திருமுறைப் பண்ணிசைப் போட்டி சமவர்களுக்கும நடைபெறும். கட்டுரைகள் 10-4-72 க்கு முன் ஆதீனத்திறகு வந்துசேர வேண்டும். திருமுறையோதுதல் 16-4-72 காலை 9 மணிக்கு ஆதீனத்தில் நடைபெறும். திருமுறை நூல்கள் பரிசில்களாக வழங்கப்பெறும்.

பாலர் திருமுறைப் பண்ணிசைப் போட்டி: 10 நிமிடத்திற்குத் திருமுறையோதல வேண்டும், 10 20 வயதுக்குட்பட்டவர்களுக்காக இரு போட்டிகள் இடம்பெறும் 16-4-72 காலை 9மணியளவில் ஆதீனததில நடைபெறும் தெரிவுப் போட்டியில தெரிவு செய்யபபடுபவர் அன்று பிறபகல் நடைபெறும பண்ணிசை அரங்கில திருமுறையோதுதல் வேண்டும. நடுவர் குழுத தீர்ப்பே முடிவானது.

## திரு மார்க்கண்டன் நினைவு தினம்

"காலம் சென்ற திரு. ஆ. மார்க்கண்டன் ஞாபகார்த்தமாக காந்திய — சர்வோதய இலட்சியங்களை அடிப்படையாக வைதது வருடம்தோறும் மாணவர்கள் மத்தியில கட்டுரை பேச்சு முதலிய பரிசுப் போட்டிகள் நடாத்தி முதன்மை பெற்றவர்களுக்கு விசேட பரிசளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' என திரு. சி. க வேலாயுதபிள்ளையவர்கள் 2-4-72ல் உருத்திரபுரம் காந்தி நிலையததில திரு ஆ மார்க்கண்டன் ஞாபகார்த்த பிரார்த்தனைக கூட்டததில் தெரிவித்தார்கள்.

ஓய்வு நேரத்தையும் சமூக சேவைக்காகவே தியாகம் செய்தார். இவரைப் பின்பற்றி இப்போது உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் ஓய்வு முறை காலத்தையும் சமூக சேவைக்கு பயன் படுத்தல் வேண்டும் என அழைக்கின்றேன். ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் உழைப்பை நாடாமல் காந்திய-சர்வோதயபணிகளுக்கு வருமாறு வேண்டுகின்றேன் என திரு. வேலாயுதபிள்ளை மேலும் கேட்டுக் கொண்டார்.

திரு. மார்க்கண்டன் அவர்களது சேவைகளை பாராட்டி திரு சோமசுந்தரம்பிள்ளை திரு. சி. இராசரெத்தினம் ஆகியோர் பேசினார்கள். கொழும்பில் சர்வோதய பாத்திர இயக்கத்தை பரப்ப திரு. மார்க்கண்டன் செய்த பணிகள் இன்று அங்கு "சர்வோதய நிகேதன்" என்ற ஆச்சிரமத்தை நடாத்த வழிகோலி உள்ளது என திரு. தம்பிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நண்பகல் அடியார்களுக்கு காந்தி நிலையத்தில் மாகேசுர பூசை நடந்தது. திரு. மார்க்கண்டன் அவர்களது குடும்பத்தினர் சமூகமளித்து சிரார்த்த தினத்தைக் கொண்டாடினார்கள்.

## திருவிழா

ஏழாலை மத்தி, துவரைக்கலட்டி, வறுத்தப்பளை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்தத் திருவிழா எதிர்வரும பரிதாபி வருஷம் சித்திரை மாதம 6ம் நாள (18-4-72) செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக 16ம் நாள் (28-4-72) வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன நிறைவுபெறும.

—0—

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

## எங்கள் அறிவித்தல்

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, இந்துசாதனம் காரியாலயம் இரண்டிலும் கடமையாற்றுவோர்க்கு 12-4-72 தொடக்கம் 17-4-72 வரை புதிய வருஷ நிமித்தமாக விடுமுறை தினங்களாகும், 14-4-72 இல் தமிழ், ஆங்கில பத்திரிகைகளும் வெளிவரமாட்டா கருமாரம்பம் 17-4-72 திங்கட்கிழமை முற்பகல் 9-15 மணிக்கு ஆரம்பமாகும்.

—அதிபர்

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஞூ பங்குனி மீ உடு-உ வெள்ளிக்கிழமை [1972]

# கதிர்காம மடங்கள்

கதிர்காமம் ஈழநாட்டிலுள்ள முருகனுடைய தலங்களுள் சிறந்தது. அதனுடைய பெருமையைத் தட்சிண கைலாய மான்மியம், தமிழிலக்கியங்கள், பக்தி நூல்கள், மகாவம்சம் முதலிய நூல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். மக்கள் சாதி மத பேதமின்றி முருகப் பெருமானை வழிபடவும் பேதங்களை மறந்து இனவொற்றுமையை வளர்க்கவும் இத் தலம் உதவுகின்றது. சிதம்பரத்தில் அடியார்கள் நடராசப்பெருமானைச் சிதாகாசமாக வழிபடுவதுபோல இங்கும் அடியவர்கள் முருகப் பெருமானை சிதாகாச வடிவாக வழிபடுவார்கள். அடியார்கள் தங்கியிருந்து தங்கள் சிரமங்களைப் போக்கி முருகப்பெருமானை ஆறுதலாக வழிபடுதற்கு முற்காலத்தில் பல திருமடங்கள் நிறுவப்பெற்றன. ஒவ்வொரு திருமடத்திலும் ஒரு சுவாமி அறையுண்டு அங்கு தாபிக்கப்பெற்றிருக்கும் மூர்த்திக்கு தினசரி திருவிளக்கேற்றி ஆராதனைகள் நிகழும். ஒரு மனிதனுடைய உடம்பில் இருதயமும் பிற உறுப்புகளும் அமைந்திருக்கின்றதைக் காண்கின்றோம். இருதயம் மிக முக்கியமான உறுப்பு, இருந்தாலும் அதனுடைய இயக்கத்துக்கு தலை, கை, கால் முதலிய உறுப்புக்களும அவசியமாகும். உடலிலுள்ள உறுப்புக்கள் எல்லாம் நிரம்பியிருந்தாற்றான் உடம்பு ஒருவனுக்குச் சிறப்பைக் கொடுக்கும். உடம்பால் அடைய வேண்டிய பயனையும் அடைவான். அதே போல கதிர்காம க்ஷேத்திரம் ஒருவனுடைய இருதயம் போல உள்ளது. மடங்கள் உடம்பின் உறுப்புக்கள் போல உள்ளன. மடங்களை அகற்றுதல் உடம்பின் உறுப்புக்களை அகற்றுவதற்குச் சமானமாகும்.

"மடம்பெற்ற பேறு திருக்கோயிலுக்கில்லை இவ்வையகத்தே"

என ஒரு ஆன்றோர் கூறியிருக்கின்றார்.

சென்ற வாரம் வெளிவந்த இந்துசாதனத்தில் கதிர்காமம் ஸ்ரீ சடையம்மா மட சபைக் காரியதரிசி கதிர்காம மடங்களின் நோக்கங்களைப்பற்றியும், உபயோகங்களைப்பற்றியும் கதிர்காமத்தைப் புனித நகராக்கும் திட்டத்தின்படி அம்மடங்களை அகற்றுவதன் கொடுமைகளைப்பற்றியும விபரித்து அத்திட்டத்தின்படி அம்மடங்களை அகற்றுவதை நிறுத்தி வைக்கும்படியும் கனம் பிரதம மந்திரியவர்களுக்கு ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

சடையம்மா மடம் மிகவும் பழமையானது. சடையம்மா என்னும் அம்மையார் நல்லூரிற் பிறந்தவர். நல்லூர் முருகப்பெருமானுக்காளாகி நல்லூரில் சிவதொண்டுசெய்ய ஆரம்பித்தார் நல்லூரில் அறுபத்து மூவர் குருபூசை மடத்தை அமைத்து அங்கு குருபூசைகளைச் சிறப்பாக நடைபெறச் செய்தார். நல்லூர் பெருமானிடத்தில் அன்புள்ளவர்கள் கதிர்காமக் கந்தனிடத்திலும் அன்பு கொள்வார்கள். பிரயாண வசதிகள், வாகன வசதிகளில்லாத காலத்தில் கதிர்காமத்தில் அம்மையார் பெருஞ்சிரமப்பட்டு ஒரு திருமடத்தைக் கட்டினர். பதுளை முதலியவிடங்களிலிருந்து மடங்கட்டுவதற்குத் தேவையான மரங்களை மாணிக்க கங்கை மார்க்கமாகத் தருவித்துத் திருமடத்தைக் கட்டினர். அம்மடத்தில் அடியார்கள் தங்கிச்செல்ல இருநான்கு அறைகள் உண்டு. மடத்தின் முகப்பில் ஒரு கோவிலுண்டு. அங்கு வேலும், ஒரு விநாயகரும், பழனியாண்டவரும் பிரதிஷ்டைசெய்யப்பட்டிருக்கின்றன.

இராமகிருஷ்ண மடம் பெருந்தொகைச் செலவில் கூடுதலான இடவசதிகளுடன் கட்டப்பட்டு யாத்திரீகர்த் தொண்டாற்றுவதை யாவரும் அறிவர். அங்கு சாதி, மதபேதமின்றி தினமும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அன்னதானம் செய்யப்படுகின்றது

பெரும் பிரார்த்தனை மண்டபம் இறைவழிபாட்டுக்கு அமைக்கப்பட்டிருக்கின்றது. கதிர்காமத்தினுடைய புனிதத்தன்மைக்கு இம்மடங்கள் உறுதுணை புரியும் அவற்றை அகற்றுதல் தர்மமல்ல. கனம் பிரதம மந்திரியவர்கள் சடையம்மா மடச் சபைக் காரியதரிசியின் விண்ணப்பத்தைப் பரிசீலனைசெய்து மடங்களை அகற்றுவதை நிறுத்திவைக்க முயற்சிசெய்வார்களாக.

இலங்கையில் முதன்முதலாக நடைபெறும்

**காஞ்சிபுரம் தொண்டை மண்டலம் மெய்கண்டார் ஆதீன பிரதம குருபூஜை**

இடம்: சரஸ்வதி மண்டபம்,
பம்பலப்பிட்டி, கொழும்பு

காலம்: எதிர்வரும் சித்திரைத் திங்கள்
24; 25, 26 ஆம் திகதிகள் (6, 7, 8—5—72)

இதில் பங்குபற்றவும், ஒத்துழைக்கவும் விரும்பும் சைவ ஸ்தாபனங்கள், சைவ மெய்யன்பர்கள், காலதாமதமின்றி கீழ்க்கண்டவாறு குருபூஜைத் தலைவருடன் தொடர்பு கொள்க.

பொ. நல்லையா,
(கொழும்பு இந்து கனிஷ்ட பாடசாலை முன்னாள் அதிபர்)
22, லில்லி அவென்யூ, கொழும்பு.
தொலைபேசி: 82967

# தருமபுரவாதீனம் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு சிதம்பரத்தில் மகத்தான வரவேற்பு

["இந்துசாதனம்" அபிமான நிருபர்
திரு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 26-ஆவது பட்டம் குருமகா சந்நிதானமாக அருளாட்சியை ஏற்றுக்கொண்டுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தைத்திங்கள் 21-ஆம் நாள் காலை தில்லையம்பதி ஸ்ரீ நடராசப் பெருமான் திருக்கோயிலுக்கு வருகை புரிந்தார்கள். பொது தீக்ஷிதர்கள் கீழக் கோபுர வாசலில்கூடி நாதசுர கோஷங்களுடனும, 21 அதிர் வெடிகளுடனும மாலை அணிவித்து எதிர்கொண்டு வரவேற்று, திருக்கோயிலுக்குள் அழைத்துச் சென்று இரத்தோற்சவ காலங்களில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராசப்பெருமானுக்கு அணியப்படும திருவாபரணங்களைச் சிறப்பாக அணிவித்து, ஆராதனைகள் செய்து ரகசிய தரிசனம செய்வித்து பிரசாதங்கள் வழங்கி உயர்ந்த பொன்னாடைப் போர்த்தி மாலை அணிவித்து, தேவசபைக்கு அழைத்து வந்து அமரவைத்துப் பாராட்டுப் பத்திரம் வாசித்தளித்து பாராட்டுதல் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தீக்ஷிதர் அனைவருக்கும் (200 தீக்ஷிதர்களுக்கு) புத்தாடைகள் வழங்கி, ரூபா 1001/- (ஆயிரத்தொன்று) நன்கொடை அளித்தார்கள்.

ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் இரு சந்தான குருமூர்த்திகளான, கொற்றவன் குடி ஸ்ரீ உமாபதி தேவரையும், திருக்களாஞ்சேரி ஸ்ரீ மறைஞான சம்பந்தரையும் வழிபாடுகள் செய்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம அவர்களை தில்லை பதிமக்கள். ஆதீனத்தின் கிளை மடாலயத்திலிருந்து சவாரி சிவிகையில் (வெள்ளி சிவிகை) எழுந்தருளச்செய்து, மகத்தான முறையில் ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயில் கீழசந்நிதி வரை பட்டினப் பிரவேசமாக அழைத்துவந்தும் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் திருக்கோயில மகாகும்பாபிஷேகத்தின் சொற்பொழிவுக்காக அமைக்கப்பட்டிருந்த பந்தலில பாராட்டு விழாவை சிறப்புடன் நடத்தி வைத்தார்கள். ஏராளமான மக்கள் சமூகமளித்திருந்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம அவர்கள பாராட்டு விழாவில் ஆசியுரை வழங்குகையில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருக்கோயில சுற்றுமதில் திருப்பணிக்காக 'பிறந்த நாள் (ஜனன நட்சத்திர) வழிபாட்டுத் திட்டம் ஆண்டு 1க்கு ரூபாய் 125/ கட்டு சந்தா தொகை வகுக்கப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும் உள்ள அன்பர்களும உள் அன்புடன் திருப்பணியில் முடியும் வரை சந்தாதாரராகப் பங்குகொள்ள வேண்டும். என பெயரில் ஆண்டு ஒன்றுக்கு 24 சந்தாத் தொகை ஏற்றுக்கொண்டு, மேலும் 36 சந்தாதாரர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்து கொள்ளும்படி ஆவன செய்கின்றேன்". தினசரி திருமதில் வேலை ரூபாய் 100க்கு நடைபெற்று வரல் வேண்டும். ஆகவே அன்பர்கள் அனைவரும் இத் திட்டத்தில பங்குகொண்டு, வாழையடி வாழையாக ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவருளால அனைவரும் வாழவேண்டுமென்றும் வாழ்த்தினார்கள். சுற்றுமதில் திருப்பணி பிறந்த நாள் வழிபாட்டுத் திட்டத்தில சேருவதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 125 சந்தா உள்ளது. சந்தா தொகையில ரூபாய் 125 அளிப்பதில், சுற்றுமதில் திருப்பணிக்காக ரூபாய் 100 சேர்த்துக் கொண்டு எஞ்சிய ரூபாய் 25க்கும் அவர் அவர்கள் பிறந்த நாளன்று அர்ச்சனை ஆராதனைகள் நடத்தி ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவுருவத்துடன பிரசாதங்கள அனுப்பி வைப்பார்கள்.

பங்குகொள்ள விரும்புவோர் ஸ்ரீ நடராஜப்பெருமான் சுற்றுமதில் திருப்பணிக் குழு சிதம்பரம், தென்னிந்தியா. என்ற முகவரிக்கு கடித தொடர்பு கொள்ளலாம்.

# தமிழ்ப் பெரியார் பிரிவு

பன்னெடுங்காலம் தமிழ் நூல்களை முறையாக உயர்திரு. சுவாமி விபுலானந்த அடிகளாரிடமும் பிறரிடமும் கற்றுத் தமிழ்த் தொண்டு புரிந்த தமிழ்ப்பெரியார் திரு மா. பீதாம்பரன் அவர்கள் 5-4-72 புதன்கிழமை திருமலையில் சிவபதமடைந்தனர். அவருடைய ஜனனவூர் சாவகச்சேரி. இப்பொழுது பளவெட்டி அருணோதயக் கல்லூரியென அழைக்கப்படுகின்ற கல்வித் தாபனம் அளவெட்டி இந்து ஆங்கில பாடசாலையாக விருந்த காலத்தில் அதில் ஆசிரியராகச் சேர்ந்தனர். பின்பு உடுப்பிட்டி பரராய் இந்துக் கல்லூரி முதலிய இடங்களில் ஆசிரியராகக் கடமையாற்றினர். சிறு வயதிலேயே செய்யுளியற்றல் வியாசங்களை வரைதல் உபந்நியாசங்கள் புரிதல் முதலிய கடமைகளைச் செய்தனர் தமிழ்நாட்டுக்குள்ள பல தமிழறிஞருடைய நட்பையும் அபிமானத்தையும் பெற்றனர். நமது பத்திரிகையின் பத்திராதிபராகக் கடமையாற்றிய பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களுடன் இந்துசாதனம் உதவியாசிரியராகவும் கடமை புரிந்தனர்.

தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டுமென்ற நிதத்துடன் கடமை புரிந்தார். கடைசிக் காலத்தில் திருகோணமலையை வாசத்தலமாகக்கொண்டு தொண்டுகள் புரிந்தனர் ஈழநாட்டிலுள்ள சைவத் தலங்களைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைந்து சைவத்தை வளர்த்தனர். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அத்தியட்சகராகக் கடமை புரிந்த திரு. M. குமாரசுவாமி அவர்கள் இவருக்குத் தச்சசேகரன் பாட நூல்களும் எழுதி வெளியிட்டனர். எங்கள் இந்துசாதனத்துக்குக் காலத்துக்குக் காலம் செய்யுள் வடிவிலும், வசன நடைமுறையிலும் விஷயதானங்கள் செய்துள்ளார் அவருடைய பிரிவு தமிழுலகுக்குப் பெரிய இழப்பாகும். அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக,

# நாவலர் நெறியில் நடைபெறவிருக்கும் சமயப்பாடப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தும் சமய பாடப் பரீட்சைகள் 5—11—72 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். விண்ணப்பங்கள் முடிவு திகதி 31—8—72. விபரங்களுக்கு பரீட்சைக் காரியதரிசிக்கு எழுதுக.

# திருச்செந்தூர் செல்லுகின்றார்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீல ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மே மாத முதல் வாரத்தில் திருச்செந்தூர் செல்லவிருக்கின்றார். ஆங்கு ஒரு வாரகாலம் கதாப்பிரசங்க நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு, மதுரை ஆதீனத்துக்கு விஜயம் செய்வார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

வண்ணார்பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம்
கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை — வழக்காளி
இல: M B 10966 எதிராக
வண்ணார்பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம்
முத்துக்குமாரு கைம்பெண் வள்ளியம்மை — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 10966-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ம் ஆண்டு சித்திரை மாதம் 26-ந் திகதி (26-4-72) புதன்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3188-00. இன்னும் ரூபாய் 2000-00 துக்கு 22-7-69 தொடக்கம் 25-11-69 வரைக்கும் 11 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 300-00. தீர்வைத் தொகையில் ரூபாய் 650-00ம் செலவில் ரூபாய் 150-00-ம் கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வண்ணார்பண்ணை வடமேற்கு வண்ணார்பண்ணை பிறை "தாளையோடு புலம்" பர. நில இலா. 2½ வீடு பயிர் வகைகள். தென்கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு ஐயபிள்ளை சுப்பையாவுக்கும் பொன்னம்பலம் தம்பிப்பிள்ளைக்குமுரிய ஆதனம். மேற்கும் தெற்கும் ஒழுங்கை. பதிவிலக்கம - D 234 / 275

செ. விசாகரெத்தினம்.
133, பருத்தித்துறை றோட்டு, நல்லூர் - யாழ்ப்பாணம். 10—4—72
கொமிஷனர், விலைமதிப்பாளர்
எம் 19 7—72,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M. B. 10562

நன்னித்தம்பி செல்லையா கைம்பெண் குழந்தையம்மாள்
தெல்லிப்பழை மேற்கு, தற்போது கொழும்பு — வழக்காளி
எதிராக
1. இளையவன் முத்து கைம்பெண் நன்னி
2. முத்து செல்லத்துரை இருவரும் மல்லாகம் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 10562-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1972-ம் வருஷம் வைகாசி மாதம் 3-ம் திகதி (3-5-72) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 8600-00. 23-1-69 தொடக்கம் 12-4-71 வரைக்கும் ரூபாய் 6000-00க்கு 10 வீத வட்டியும் அதற்குப்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும். கோட்டுச் செலவு ரூபா 629-60 சதம. இதில் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 1000-00 குறைக்கவேண்டியது.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று, மல்லாகம் இறை "தலையா புலம்" (Thalaiyaapulam) இதன் நிலப்பரப்பு 15, குளிகள் 2ம், மேற்கெல்லைக் காணிக் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு நன்னித்தம்பி இளையதம்பியின் உரிமையாளரின் ஆதனம். வடக்கு சிதம்பரம் அம்பலவாண சுவாமி கோவிலிற்குரிய காணி. மேற்கு பொன்னர் செல்லப்பாவும் வேலுப்பிள்ளை மயில்வாகனத்தின் ஆதனம், தெற்கு கார்த்திகேசு முருகேசுவும் கணபதிப்பிள்ளை கார்த்திகேசுவின் காணிகள். இதடங்கலும் பதிவு H 303 / 130.

2. ஷை மல்லாகம் இறை "அம்பத்தையும் மாயிலிவுடையும்", (Ampaththai & Mayilivudai) இதன் நிலப் பரப்பு 4-ம், கிணறும் செய்பயிர் வான்பயிர் வகைகளும். எல்லை கிழக்கு நாகர் கந்தையாவின் பெண் வள்ளிப்பிள்ளையின் ஆதனம், வடக்கு இளையவன் முத்தனின் உரிமையாளர்களின் ஆதனம். மேற்கு கந்தையன் பெண் சின்னாச்சயும் பங்காளர்களினதும ஆதனம். தெற்கு ஒழுங்கை இதடங்கலும் பதிவு H 3?9 / 259,

3. ஷை மல்லாகம் இறை "அம்பறல்கடவை" (Ampanalkadavai). இதன் நிலப்பரப்பு 10-ம், வீடுகளும் கிணறும் செய்பயிர் வான்பயிர் வகைகளும், மேற்கெல்லைக் கிணற்றில் பங்கும். எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு இளையவன் சீனிக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கையும் வாய்க்காலும், முருகேசு பெண் இராசம்மாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு மாதன் பசுபதியும் பெண் பாக்கியத்தின் ஆதனம. இதடங்கலும் பதிவு: H 355 / 190.

வே. கோபாலபிள்ளை
22, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 21-3-72
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம் 22 7—4—72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M B 11600

சின்னவி செல்லப்பா
உடுவில் வழக்காளி
எதிராக
1. செல்லப்பா அம்பலவாணரும்
2 பெண் லட்சுமிப்பிள்ளை
மடத்தடி, உடுவில எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 11600ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ஆம் ஆண்டு மே மீ 10-ம் உ (10-5-72) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா 2750/- பின் 1-4-70 தொடக்கம் 9-9-70 வரை ரூபா 1900-க்கு 10 வீத வட்டியும் பின் முழுத்தொகைக்கும் இறுபடும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 283-40 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று உடுவில் "நச்சன்தனை" ப. கி. 3 பதிவு இல: H 2?7/49 இதில் வடக்குப் பக்கமாக விற்று உறுதிமுடிக்க பர. கி 2 நீக்கி மிகுதி தெற்குப் பக்கமாக ப கி 1ம் மேற்படி இறை "நச்சன்தனை" பர. கி. 3 பதிவு இல H 297/150 இதில் வடக்குப் பக்கமாக பர. கி. 1 இரு பிரிவுகளுமாக பர. கி. 2 வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் வழிவாய்க்கால் பாவிப்புப் பாத்தியதையும் தெற்கெல்லைக் காணியில இருக்கும் கிணற்றில் தண்ணீர் அள்ளவு வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு நாகமுத்து கந்தையாவின் ஆதனம் மேற்கு செல்லையாவின் ஆதனம், தெற்கு வயித்திலிங்கம் ஐயம்பிள்ளைக்கும் பெண் வள்ளிப்பிள்ளைக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.
பதிவு இல: H. 3?1/39

சி. சே மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரரும
விதானை வளவு,
சித்தங்கேணி எம் 21 7-4-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 8243

கந்தன் கிட்டினன் அச்சுவேலி தெற்கு — வழக்காளி.
எதிராக
காலஞ்சென்ற செம்பன் கிட்டினனும் அன்னாரின் கைம்பெண் இராசம்மா, காலஞ்சென்ற செம்பன் கிட்டினனின் தந்துவகாரராக.
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின M B 8243ம இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால விபரிக்கப்படும் துண்டுக் காணி 1972-ம ஆண்டு சித்திரை மீ 20-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில என்னால விற்கப்படும

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 1200/- 22—6—66 தொடக்கம் 7—2—70 வரைக்கும் ரூபாய் 600/-க்கு 10% வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 361-82ம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோவிற்பற்று அச்சுவேலி தெற்கில் உள்ள நாவல்காடு எனனும் 17 நிலப்பரப்பும அதில் அடங்கிய வீடும், கிணறும், வான்பயிர் வளர்பயிர்களும இது அடங்கலிலும் 218/768 பங்கு இதற்கு எல்லை கிழக்கும், தெற்கும் ஒழுங்கை, வடக்கு முருகேசு பெண் வள்ளியும நாகன் பெண் வள்ளியினதுப் பங்காளரினதும் ஆதனம. மேற்கு ஒழுங்கையும். வேலன் வைரமுத்துவினதுப் பங்காளரினதும் ஆதனம். இது அடங்கலிலும் சொரியலாக 218/768 பங்குகள்.

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் மதிப்பாளரும்.
தொல்புரம்,
15-3-72 M 28 7—4—72

# முருகப்பெருமான்

பருத்தித்துறை ஆலடிப் பிள்ளையார் கோவிலை அடுத்துள்ள ஒரு காணியில் கிணறு ஒன்று தோண்டும்போது ஆறுமுகங்களைக் கொண்ட முருகப்பெருமான் சிலை ஒன்று கண்டெடுக்கப்பெற்றது. இப்போது இச்சிலை மட்டுவில் அம்மன் கோவிலில் வைக்கப்பெற்றுள்ளது.

# பஜனை ஊர்வலம்

நல்லை. ஆதீனத்தில் 14-4-72 தொடக்கம 20-4-72 வரை நிகழவிருக்கும் திருநெறிய தெய்வீக மகாநாட்டினையொட்டி வண்ணை. வைத்தீஸ்வரன் கோயில், அரியாலை நல்லூர்-பிள்ளையார்கோயில்கள் யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி யம்பாள கோவில் திருநெல்வேலி சிவன்கோவில் ஆகிய இடங்களிலிருந்து திருமுறைப் பஜனை ஊர்வலங்கள் முதல்நாள் மாலை இடம்பெறும். புத்தகக் கண் காட்சியும் ஒழுங்கு செய்யப்பெற்றுள்ளது. (ந நி.)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்

இல: M B 8789

1. கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். துரைசாமி கனகசிங்கம் —வழக்காளிகள்
எதிராக
வேலணை கிழக்கு, வேலணை செல்லப்பா இராசரெத்தினம்
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 8789ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி என்னால் 1972-ம் வருடம் வைகாசி மாதம் 6-ஆம் திகதி (6-5-72) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2280-00ம் ரூபா 1500/-க்கு 27-1-67 தொடக்கம் 17—9—68வரை 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 308-8 சதம் இதில் ரூபாய் 1500/- கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பகுதி அலைப்பிட்டிக் கோவிற்பற்று மண்கும்பான் இறை 'உவரோடைக்குத் தெற்கு உவரோடை' பரப்பு இலா. இருபத்தைந்து (பரப்பு இலா. 45) இதில் வடக்குப் பக்கமாய்ப் பரப்பு இலா இருபத்தைந்து (பரப்பு இலா 25) வீடும் செய்பயிர்களும வான் பயிர்களும கிணறும் மற்றும் அதற்குரியவைகளும் இருந்தப் பர. கி இலா. 25க்கு எல்லை கிழக்கு செல்லப்பா தளையசிங்கத்திற்குரிய ஆதனம் வடக்கும், மேற்கும் ஒழுங்கை தெற்கு செல்லப்பா கைம்பெண் முத்தாச்சிப்பிள்ளைக்குரிய இவ்வாதனத்தின் மிகுதியாதனம்,

இதன் பதிவு: C 829/1?

வை. ஏரம்பமூர்த்தி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும
Commissioner of Sales, Valuer
காரைநகர்.
1972ஆ பங்குனி மீ 30ம் திகதி
எம் 4. 4-7-72

## COMMISSION SALE

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில்

இல: 11419

1. புலோலி கிழக்கு, பருத்தித்துறை கணபதிப்பிள்ளை நடராசா — வழக்காளிகள்
எதிராக
வராத்துப்பளை புலோலி கிழக்கு பருத்தித்துறை 1. கணபதிப்பிள்ளை கதிரவேற்பிள்ளை
2. பெண் இராசேஸ்வரி
எதிரிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதனகீழ விபரிக்கப்படும் ஆதனங்கள் 1972ம் ஆண்டு வைகாசி மீ 20ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோவிற்பற்று

1. புலோலி கிழக்கு சிங்கபாகுதேவன் குறிச்சியிறை குடபுலவெல நிலப்பரப்பு 22¾ இதிலூடாகப் போகும் ஒழுங்கைக்கு மேற்குப் புறமாக 5/? பங்கில் வடகிழக்குப்புறமாக 1/16பங்கு கழித்து, மிகுதி 9/10 பங்கு உலாந்தா பேஸ்தா க கணபதிப்பிள்ளையால 1941ம் ஆ சித்திரை மாதம் 17ந் திகதி 653 ந் இலக்கத்தில விந்தாரிக்கப்பட்டதும். 1107/Pம இலக்கப் பிரிவிடல வழக்குக் கடைசித் தீர்வையுடன் அணைக்கப்பட்டதுமான படத்தின்படி நிலப்பரப்பு 17 குளி 10 இதில் தெருப் புறமாக நிலப்பரப்பு 2 குளி ?/32 எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் செல்லம்மாவுக்குமுரிய ஆதனமும், சின்னத்தம்பி கதிர்காமுவுக்குரிய பிரைகாணும் 5ம் துண்டும, பரமு பெண் கோணுத்தைப்பிள்ளைக்குரிய 6ம் துண்டும் வடக்கு பரமு பெண் கோணுத்தைப்பிள்ளைக்குரிய இத்துணுவ மிகுதிப பாகங்கள். மேற்கு சின்னத்தம்பி சதிர்காமுவுக்குமுரிய 2ம் நம்பர் துண்டு தெற்கு தண்ணீர் வாய்க்கால், இது முழுவதும் கிணற்றுக்கும் அதன ஊளிப்புக்காக வடப்பட்ட குறித்தபடத்தில் 7ம் நம்பர் துண்டாகிய குளி 8இல் அரை வாசியல் இறைத்துரிய டங்கும். அதற்குள்ளிருக்கும் கிணற்றில் 3/20 பங்கும B C அட்சரமிடப்பட்ட வாய்க்காலைப் பாவிக்கும் உரித்தும்.

2. மேற்சொல்லிய காணியில் குறித்த படத்தில் 4ம் நம்பர் துண்டுகத நிலப்பரப்பு 1 குளி 27/32 எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு கணபதிப்பிள்ளை பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனம, மேற்கு மேற்சொல்லிய ஆதனம். தெற்கு சின்னத்தம்பி கதிர்காமுவுக்குமுரிய குறுந்த படத்தில 5ம் நம்பர் துண்டு; இது முழுவதும் மேற்சொல்லிய கிணற்றில் 3/20 பங்கில இதற்குரிய பங்கும் A B C என அட்சரமிடப்பட்ட வாய்க்காலைப் பாவிக்கும் உரித்தும்.

தீர்ப்புத் தொகை ரூபாய் 3408-85 இதில் ரூபாய் 000 00க்கு 1—7—71 தொடக்கம் 24—8—71 வரை 8 வீத வட்டி அதன்பின் முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் செலவு ரூபாய் 256-58

V. M கந்தசாமி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை, 19-11-71.
எம். 339 10-12-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 10861

சங்கரப்பிள்ளை சிவலிங்கம் கைம் பெண் ராசம்மா நீர்வேலிதெற்கு நீர்வேலி -வழக்காளி

எதிராக

கனகசபை ராசையா ராசேஸ் வரிவீதி, அரியாலை யாழ்ப்பாணம் — எதிரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10861-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க் காணும் இரு துண்டுக்காணிகளை 1972-ஆம் ஆண்டு மே மீ 3-ஆந் திகதி புதன்கிழமை (3-5-72) முற் பகல் 10-00 மணி தொடக் கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற் கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 5512-50 சதம். பின் 4-6-69 தொடக்கம் 11-5-71 வரை ரூபா 4500 -க்கு 15 வீத வட்டியும் பின் முழுத் தொகையும் இறுப டும்வரை 5 வீத வட்டியும்கோட் டுச் செலவு ரூபா 452-20 சதம்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பா ணம் டிஸ்றிக்யாழ்ப்பாணப்பகுதி கண்டுக்குளி கோயிற்பற்று சிவி யாதெரு இறை கொத்தன் காட் டுப்புலமும் மறுபிரிவுகளும் ப. கி 12-ம் வீடும் பயிர்களும் எல்லை கிழக்கு கீழ்க்காணும் 2-ம் ஆத னம். வடக்கு கை ஒழுங்கை மேற்கு ரோட்டு தெறகு நவரத் தினத்துக்கும் பெண் காமாட்சி க்குரியஆதனம். இது அடங்கலும்.

2. மேற்படிசிவியாதெருஇறை கொத்தன் காட்டுப்புலமும் ப. கி. 6½ இதற்கு எல்லைகிழக்கு சின் னத்தம்பி கந்தையாவுக்குரிய ஆத னம். வடக்கு விசுவலிங்கம்பெண் சிவசுந்தரத்துக்கும் மறுபெயருக் கும் உரிய ஆதனம், மேற்கு மேற் காட்டிய காணியும் மேற்குப் பக்க ஒழுங்கையால்போகும் கை ஒழுங்கை முகப்பும், தெற்கு பொன்னம்பலம் பூரணத்துக்கு ரிய ஆதனம் இது அடங்கலும்.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலத்தாரர்.
"சந்தணை வளவு"
சித்தன்கேணி, 16-3-72.
எம் 7. 7-4-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 10731

வட்டுக்கோட்டை மேற்கு முத்து சாமி சீவரெத்தினம் — வழக்காளர்

எதிரராக

அராலி கிழக்கு
1. சின்னத்தம்பி செபமாலையும்
2. சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை யும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின M B 10731ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972ம் ஆண்டு வைகாசி மாதம 13ம் திகதி சனிக்கிழமை முறபகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிர சித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 166ம 29-3-69 தொடக கம் 19 - 3 - 70 வரைக்கும ரூபா 700க்கு 10 வீத வட்டி யும் அதன்பின் முழுத்தொகைக் கும் இறுக்கும்வரை 5 வீத வட்டி யும கோட்டுச் செலவு ரூபாய் 264-50 சதமும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற் பற்று அராலி கிழக்கு இறை 'வடுவார் ஓடை' பர. நி. இலா. ம், குளி 3ம் பயிாவகைகளும் எல்லை கிழக்கு முருகேசு மருதப புக்கும் மறுபேருக்குமுரிய ஆத னம், வடக்குஐயன் கைம்பெண வல்லிக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு கந்தன் வயிரவ னின்ஆதனமும், கையொழுங்கை யும, தெற்கு சின்னவன் ஆறு முகத்தாருக்கும் பெண் முத்திக் கும், கையொழுங்கை முகப்பும், இதடங்கலும.

அ. ஜெகநாதன்
கொமிஷனரும்,
விலைமதிப்பாரும்
16 A அம்மன் ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
12, 7—4—72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இலக்கம்: M B 11917

காரைநகர், கணபதிப்பிள்ளை சண்முகம் தானுகவும், தனது காலஞ்சென்ற பெண் சரஸ்வதியின் மரண சாதனத்தும். தத்துவத்தும் யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் தத்துவ வழக்கு இல: 2233 இல் தத்துவகாரராக —வழக்காளி

எதிராக

1. சுப்பையா சதிரித்தம்பி 2. சுப்பையா செல்லத்துரை
3. நடராசா கைம்பெண் சுந்தரலெட்சுமி, காரம்பன், ஊர் காவற்துறை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11917-ம் இலக்க வழக்கில் எனச்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விடரிக்கப்படும் ஏழு (7) துண்டுக்காணிகளை 1972-ம் ஆண்டு வைகாசி மீ 23-ம் திகதி (23—5—72) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு முதலாம் காணியும், 9-30 மணிக்கு இரண் டாம் காணியும், 10-30 மணிக்கு மூன்றும் காணியும், 11-30 மணிக்கு நாலாம் காணியும், 12 மணிககு ஐந்தாம் காணியும், 12-30 மணிக்கு ஆறும் காணியும், 1-30 மணிககு ஏழாம் காணி யும் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னால் பிர சித்த ஏலத்தில் விறகப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 8000 — 00ம்' 8—8—70 தொடக்கம் ரூபாய் 8000 — 00க்கு இறுக்கும் வரை நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு ஐந்து வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபாய் 581 — 10 சதம்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி ஊர்காவற்துறை கோவிற்பற்று சரவணை இறை 'தலைகந்தை' பர. நில. இலா. 24 V. C. கிணறு, தென்னைகள், பனைகள், வேம்பு மரங்களுடன் இதற்கு எல்லை கிழக்கு இராமலிங்கம் பெண் பாறுபதிப்பிள்ளைக்கும மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு ஐயம்பிள்ளை பெண் முத்துப்பிள்ளைக்கும பங்காளருக்கும் மறுபே ருக்குமுரிய ஆதனம், மேற்கு குருநாதா இராமலிங்கத்தின் உரித்தாளிகளின ஆதனம், தெற்கு கத்தோலிக்க மிசனுக்கு முரிய ஆதனம்; இதடங்கலில் பிரிவிடப்படாத 1/3 பங்கு ஆனால் ஆதிகால உரிமையினபடி பிரித்தும், பிரத்தியேகமாகவும் எதிரிக் குரிய பர. நில. இலா. 8 நடு பக்கமாக அதிலடங்கிய வீடு கிணறு மற்றும் பயிர் வகைகளும்.

2. ஷை பிரிவு சரவணை இறை 'பெரிய காடு' பர. நில இலா, 7 V.C. இதில் இருக்குங்கிணற்றில் ½ பங்கும் இதற்கு எல்லை கிழக்கு சின்னத்தம்பி கைம்பெண் ஆரியநாச்சிப்பிள்ளையின் ஆத னம், வடக்கு பதஞ்சலி சதாசிவத்தின் ஆதனம், மேற்கு இராமலிங்கம பெண் பாறுவதிப்பிள்ளைககும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு காணி இதடங்கலும்.

3, ஷை பிரிவு ஊர்காவற்துறை கோவிற்பற்று கரம்பன் இறை 'வடக்குப் பரவைப்புலம்' பர. நில. இலா 25 P. C அதில கிழக்குப் பக்கமாக பர. நில. இலா. 7½ P. C. ஆட்சிப் படி இதறகு எல்லை கிழக்கு கதிரித்தம்பி பெண செல்லம்மா வின் ஆதனம். வடக்கு தம்பிமுத்து சிவகுருவின் ஆதனம் மேற்கு சின்னத்தம்பி குமாரசாமிக்குரிய மிகுதிக்காணி, தெற்கு சுப்பிரமணியம பெண கனமணிக்குரிய ஆதனம், இதடங்கலும 'சாந்தை' என்னும் காணியின் கிழக்கு எல்லை ஓரமாக தெற்கிலி ருக்கும் ரோட்டுக்கு இககாணியிலிருந்து செல்வதற்கு ஒதுக்கப் பட்டுள்ள ஆறுமுள அகல ஒழுங்கை பாவிப்பும், பழுதுபார்க் கும் உரித்தும்.

4 ஷை பிரிவு கரம்பன் இறை 'திட்டில்' பர. நில இலா 15 V. C. கிணற்றுடன் இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை; வடக்கு சுப்பிரமணியம் கந்தையாவின் ஆதனம். மேற்கு முத்துக்கிருஷ்ணன தம்பித்துரையின் ஆதனம். தெற்கு ஐந்தா வது காணி, இதடங்கலில் பிரிவிடப்படாத ½ பங்கு

5. ஷை பிரிவு கரம்பன் இறை பர. நில. இலா 1½ V. C 'திட்டிலுக்கு தெற்குப் பிட்டி ஒப்பம்பெறற செய்கை' இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை; வடக்கு நாலாம் காணி, மேற்கு முத்துக்கிருஷ்ணர் தம்பித்துரையின் ஆதனம், தெற்கு வயித்தி யாம்பிள்ளை மனுவேல்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம, இதடங்கலும்.

6. ஷை பிரிவு கரம்பன் இறை 'திட்டில்' பர. நில இலா. 18 V. C. இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு நடராசா பெண் சிவயோகத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு முத்துக்கிருஷ்ணர் தம்பித்துரைக்கும பங்காளருக்குமுரிய ஆதனம் தெற்கு தீயாக்குப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளைக்கும பங்காளருக்குமு ரிய ஆதனம், இதடங்கலில் பிரிவிடப்படாத ½ பங்கும. ஆத னச் சொத்துருமைகளும்.

7. ஷை பிரிவு கரம்பன் இறை 'இலந்தனை' பர. நில இலா. 15½ P. C. ஆனால் ஆட்சிப்படி 16½ பரப்பு நெற்காணி இதற்கு எல்லை கிழக்கு இராமலிங்கம கைம்பெண் ஈக்கம்மாவின் ஆதனம, வடக்கு இராமலிங்கம் கைம்பெண் ஈக்கம்மாவின் ஆதனமும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு கதிரவேலு நாகலிங்கத்தினதும் அந்தோனிப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை சிங்க ராயருக்குமுரிய ஆதனம். தெற்கு சீனித்தம்பி பெண் செல்லத் துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதடங்கலும்

ப. நா தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
எம். 5 7 4-72
167/1 கோவில் வீதி,
யாழ்ப்பாணம். 3-4-72

### கௌரி மங்கல தீபம் ஏற்றுதல்

சந்தான சௌபாக்கிய கௌரி மங்கல தீபம் புத்தாண்டு தினத் தன்று நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராசேஸ்வரியம்பாள் ஆலயத்தில ஏற்றி வைக்கப்பெறும். (ந நி,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் 1. தம்பிராசா இரத்தினசிங்கமும் பெண்
2. கனகாம்பிகையும்
மானிப்பாய் 3. V. சோமசுந்தரம் கைம்பெண் பவளலெட்சுமி
இல: M B 8713 எதிராக — வழக்காளிகள்
கொக்குவில் 1. செல்லப்பா கனகரெத்தினமும் பெண்
2 கனகம்மாவும்
காங்கேசன்துறை 3. தம்பு கந்தசாமி பெண் மகேஸ்வரி
சாவகச்சேரி 4. சாமுவல் வைமன் இரத்தினராசா ஸ்ரோனுங்கும் பெண்
5. மேரி பவளமும்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8713-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972 ம் ஆண்டு வைகாசி மீ 13 ம் உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 9375/-ம் 27-12-66 தொடக்கம 24-4 70 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 15 வீத வட்டியும் அதனபின முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 515-50 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோயிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை "கூத்சி ஓடை, குடிஓடை" பர நில இலா 8½ யும் கடை கட்டடங்களும் செய்பயிர் வான்பயிர்களும், கிணற்றில் பங்கும், வழி, வாய்க்கால் பாவிப்புரித்தும், இதில் தெற்குப் பக்கமாக பர நில இலா 4½. இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை. வடக்கு முதலாம் இரண்டாம் எதிரிகளுககுரிய மிகுதி அரைவாசி ஆதனம், மேற்கு வைரவிப்பிள்ளை அன்னலிங்கத்தின் ஆதனம் பதிவுஇலக்கம் D268/4.

அ. ஜெகநாதன்
கொமிஷனர், விலைமதிப்பாளர்
16 A. அம்மன்ரோட், கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.
எம் 10. 7-4-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கதிரிப்பாய் அச்சுவேலி
நரசிங்கம் பொன்னையா செல்லையா — வழக்காளி
இல. M B 12293 எதிராக
வீரபத்திரர் கோவிலடி கதிரிப்பாய் அச்சுவேலி
கார்த்திகேசு கந்தசாமி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12293 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பினனால் விபரிக்கப்படும ஒரு துண்டுக்காணி என்னால் 1972 ம் ஆண்டு வைகாசி மீ 10 ம திகதி புதனகிழமை முறபகல் பத்துமணி தொடக்கம அந்தக் காணிக்குள நினறு பிரசித்த ஏலத்தில் விறகப் படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1194/-ம் ரூபா. 750/-க்கு 6-2-71 தொடககம் 10-9-71 வரைககும் 10 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத மான வட்டியும கோட்டுச்செலவு ரூபா 289-55 சதம். இதில் ரூபா 750-00 கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவிற்பறறு கதிரிப்பாய் இறை "அம்பலம கூடல் கலட்டி" பர நில இலா ஐந்து குழி பதினேழு (பர நில இலா 5 குழி 17) எல்லை கிழக்கு கந்தசாமி பெண் இரத்தினபூபதிக்குரிய வாதனம, வடக்கு முருகன் தம்பனுக்குரிய வாதனம, மேற்கு இராமன் சரவணைக்கும் மறுபேருக்குமுரிய வாதனம, தெறகு காலஞ் சென்ற யோசேப் சீனியரின உரிமைக்காரருக்குரிய வாதனம இதடங்கலும்.

வை. ஏரம்பமூர்த்தி
கொமிசனரும்,
விலைமதிப்பாளரும்.
காரைநகர்
1972-ம் ஆண்டு பங்குனி மீ 16-ம் திகதி.
எம். 3 7-4-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்டம் நீதிமன்றம்

1. சுப்பிரமணியம் பொனமபலநாதன அவரது மனைவி
2. புவனேஸ்வரி, மயிட்டி வடக்கு, வழக்காளிகள்
இல: M B 11657 எதிராக
குட்டியனது கைம்பெண் குழந்தை, மயிலிட்டி வடக்கு, - எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M B 11657 ம் இலக்க வழககில எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின னால் விபரிக்கப்படும துண்டுக்காணி 1972ம ஆண்டு மே மாதம் 2ம திகதி (2-5-72) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக் கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னால் விற்கப் படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 5143ம், 3 - 5 - 70 தொடக்கம் 15 — 11 - 70 வரைக்கும் ரூபா 3000ககு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 469-49 இதில் கழிவு ரூபா 1000/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக் குப் பிரிவு மயிலிட்டிக் கோவிற்பற்று முலவை மயிலிட்டி இறை 'கழுவாவத்தை' நி. பர. 6ம கிணறும், பனை மரங்களும் தென்னை மரங்களும் எல்லை கிழக்கு ரோட், வடக்கு வலல் பொன்னனின தும் வைரவன் மாலனியினதும் ஆதனம், மேற்கு விசுவர் வைரவியினது ஆதனம், தெற்கு வலலியன் கைம்பெண வையிரியின் ஆதனம், அதடங்கலும் மேற்கூறிய கிணற்றின் தென் எல்லையிலுள்ள அதனைச் சார்ந்த சொரியல் புற நீங்கலாகவும் கிழக்கு எல்லையிலுள்ள வழிவாய்க்கால் உரித்து புற நீங்கலாக.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்
நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை. 30-3-72,
M 17. 7—4—72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வைத்திலிங்கம் நவரத்தினம், மலபார் ஸ்ரீற், கம்பொல
இல: M B 12020 எதிராக —வழக்காளி
1. நடராசா பொன்னுத்துரை பெண் 2. சின்னையா
3. கதிரவேலு சனைத்துரை ஏலேலோருர் 30 பீச ரோட், கொட்டடி, யாழ்ப்பாணம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 12020-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1972ம் ஆண்டு வைகாசி மாசம் 18ம் திகதி (18—5—72) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2475ம் 25-9-70 தொடக்கம் 7 5 71 வரைக்கும் ரூபாய் 2500க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 502—10

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென கிழக்கு இறை பள்ளுவிலித தோட்டம் பர. நில லா. (1) ஒறுப இதற்குச் சேர்ந்த வைகளும். இக்காணிக்கு எல்லை கிழக்கு S S பொன்னுத்துரையின் ஆதனம், வடக்கு வயித்தி சுப்பையாவின் ஆதனம், மேற்கு கதிரவேலு சுன்னத்துரையின் ஆதனம், தெற்கு செல்லன் சுப்பிரமணியத்தின் ஆதனம், இதடங்கலும் மேலும் மேற்குப் பக்கத்துக் காணியில் டைகத எல்லைப் பக்கமாக ரோட் டுக்குப் போக உரிமையான வழியும். பதிவு இல: D. 320/71

2. மேற்படி வண்ணார்பண்ணை தெனகிழக்கு பள்ளுவிலித தோட்டம் பரப்பு நில லாச்சம் (1) ஒறுப இதற்குச் சேர்ந்த வைகளும் இதற்கு எல்லை கிழக்கு நகனியன் பொன்னுத்துரை பெண் சின்னம்மாவின் ஆதனம், டைகத வயித்தி சுப்பையாவின் ஆதனம், மேறகு ரோட், தெற்கு செல்லன் சுப்பிரமணியத்தின் ஆதனம், பதிவு இல: 316/67

"கமலபதி" மு. நவரத்தினராசா
ஆஸ்பத்திரி வீதி, கொமிசனர் & விலைமதிப்பாளர்
மண்டைதீவு. 3-4-72 எம். 2 7—4—72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மயில்வாகனம் செல்லத்துரை, அச்சுவேலி தெற்கு
இல: M B 9455 எதிராக —வழக்காளி
1. கந்தன சண்முகம் 2. தமபர் சிங்காரம் (காலஞ்சென்றவர்)
3. த. சிங்காரம கைம்பெண் இராசம்மா மூவரும, கதிரிப்பாய், அச்சுவேலி —எதிராளி

யாழப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9455ம் இலக்க வழக்கில் எனககுக் கிடைத்த கோடடுக் கட்டளைபபடி பின்னுல விபரிககப்படும ஒரு துண்டுக்காணியை 1972ம் ஆண்டு மே மாதம் 11-ம திகதி (11—5—72) வியாழககிழமை முறபகல் 10 மணி தொடககம அந்தக் காணிக்குள நின்று பிரசித்த ஏலத்தில எனனுல் விற்கப்படும.

தீர்வைததொகை: முதல் வட்டி ரூபாய் 1540ம், 29-9-67 தொடககம் 19 8-71 வரைக்கும் ரூபாய் 1000ககும் 10 வீத வட்டியும அதன்பின் முழுத்தொகைககும் இறுக்கும வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 426-67 சதமும இதில 26 9—68 இல கொடுபட்ட ரூபாய் 1250 கழிககப்படும்.

### ஆதன விபரம

வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோவிறபறறு கதிரிப்பாய் இறை 'முடலைபபு லன்' வரகுச் செய்கை நிலபபரப்பு 30 Lms V C) வடலிகளுப எல்லை கிழககு அருணாசலம் கனகசபையினது காணி, வடககு வேலத்தான முருகனினது பங்காளரினதும காணி, மேறகு ஒழுஙகை தெற்கு சண்முகம மயிலவாகனத்தினதும பங்காளரினதும காணி, இதில சொரியலாக 8/24 பஙகு

க. சரவணமுத்து
173, குருசோவீதி சுண்டிக்குளி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 27 3 72 18 7-4-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்: வழ: இல. M. B. 12123
தியாகராசா குருக்கள் சபாரத்தினக் குருக்கள்
தெல்லிப்பழை தென்மேற்கு, —வழக்காளி
எதிராக
சின்னவன் சங்கரன், மாவிட்டபுரம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B. 12123-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1972-ம் ஆண்டு வைகாசி மீ 10-ந் திகதி (10-5-72) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3413 - 33 சதமும் 31—10—70 தொடக்கம் 24—9—71 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு நூற்றுக்கு வருஷம் 10 வீத வட்டியும பின் திகதி தொடக்கம் முழுத்தொகையும் இறுபடு வரைக்கும் நூற்றுக்கு வருஷ 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 390ம 06 சதமும்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று மாவிட்டபுரம் 'வடலியடைப்பு' நிலப்பரப்பு வரகுச்செய்கை இருபத்தைந்து (25 Lms V. C) பனைகளும் வடலிகளும் எல்லை கிழக்கும், வடக்கும் ஆறுப்பிள்ளை வேலுப்பிள்ளையின் உரிமைகாரரின் ஆதனம், தெற்கும் மேற்கும் ஒழுங்கை, இது முழுவதிலும் பிரிக்கப்படாத நிலப்பரப்பு வரகுச் செய்கை ஏழரை (7½ Lms) இதைச் சேர்ந்த வைகளும்

"நித்தியகல்யாணி" அ சிவானந்தன்
பலாலி றோட், கொமிஷனரும்,
திருநெல்வேலி வடக்கு. விலைமதிப்பாளரும்,
யாழ்ப்பாணம் 4-4-72 எம 13 7-4-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல, M B 8093

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி, இராயலிங்கம் செல்வராசா —வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம், நல்லூர்,
1. இரத்தினசபாபதி செல்வ ரெட்ணமும் பெண்
2, முத்துமணியும் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக கோட்டின MB ம 8093 இலகக வழக்கில எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல விபரிக்கப்படும ஒரு துண்டுக்காணியை 1972ம் ஆண்டு சித்திரை மீ 29ந் திகதி (29-4-72) சனிக்கிழமை முற்பகல 10. மணி தொடக்கம் அந்தக் காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத தொகை:- முதல் வட்டி ரூபா 30 5/-ம், 33-?-66 தொடக்கம் 13-6-67 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 421 - 55 சதமும்

### ஆதன விபரம்

வடமாகாணம் டிஸ்திறிக் பூனகரியன் பகுதி பூனகரியன் கோவிதபற்று மறவகுறிச்சி இறை 'தீவுவெளிதரிசு" ஏக்கர் 10 ரூட் 2 பேர்ச் 2 இதற்கு எல்லை கிழக்கு கந்தப்பர் சின்னத்தம்பிக்கும் கந்தர் செல்லையாவுக்குமுரிய ஆதனம், வடக்கு நாகப்பர் மாணிக்கத்துக்குரிய ஆதனம், மேற்கு வாய்க்கால். தெற்கு முடிக்குரிய நிலம்.
பதிவு இலக்கம்: C 35/137

அ. ஜெகநாதன்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
16, A அம்மன் றோட்,
கந்தர்மடம்; யாழ்ப்பாணம்.
எம். 11 7-4—72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: 3817

வரணி கரமபக குறிச்சி சின்னததமபியார் முருகேசு —வழககாளி

எதிராக

வரணி வரணியததாழ்வு, கந்தன சிதமபரன எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிககோட்டில 3817-ம இலக்க வழககில் எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககபபடும ஒரு துண்டுககாணியை 1972ம ஆண்டு மே (வைகாசி) மீ 11மதிகதி (11-5-72 வியாழககிழமை முறபகல 10 மணி தொடககம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கபபடும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 261 - 75ம, இதில் ரூபா 200/-க்கு 25-8-69 திகதி தொடக்கம 28-3 70 திகதி வரைக்கும் 100சகு 12 வீத வட்டியும் பின் திகதி தொடககம முழுத தொகைக்கும் இறபடும் வரைக்கும் 100 க்கு 5வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா ரூபாய் 139—60 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தெனமராட்சிப் பகுதி வரணிக கோவிறபறறு வரணி யறருவயிறை 'நல்ல தண்ணீப்பூவல்' நிலப்பரப்பு 9 5/8 ஆலை ஆட்சிபபடி நிலப்பரப்பு பனனிரண்டும் (12) தென்னை பனை, வடலி, வேம்புகளும, எலலை கிழக்கு குறித்த எதிராளிககும மறுபேருக்குமுரிய ஆதனம, வடககும், மேறகும தெற்தும ஒழுஙகை. இதடங்கலும். முறபதிப்பு F. 191/48

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 16-3-72
எம் 9 7-4-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

புத்தூர் மேற்கு, அம்பலவாணர் இராசதுரை —வழக்காளி
இல: M B 9862 எதிராக
புததூர் மேற்கு, சின்னத்தம்பி கனகசபை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9862ம் இலக்க வழக்கில எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1972-ம் ஆண்டு வைகாசி மாதம் 6-ம் திகதி (6-5-72) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும்; 10-30 மணிக்கு இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 14,060/-ம், 25-3-68 தொடக்கம் 18- 0-68 வரைக்கும் ரூபாய் 9000/-க்கு 9 வீத வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 493-75. இதில் ரூபாய் 3,300 கொடுபட்டுள்ளது.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று புத்தூர் தெறகிறை 'பற்சாண்டை மேற்கு' (Patchantai Methu) பர. நில. இலா 6, 1/16 இதற்கு எல்லை கிழக்கு கனகசபை முத்துக்குமாருவுக்கும், சின்னத்தம்பி சங்கரப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம, வடக்கு சின்னத்தம்பி சங்கரப்பிள்ளைக்கும் பஙகாளருக்குமுரிய ஆதனம், மேற்கு சின்னத்தம்பி கனகசபைக்கும், கந்தையா மகள் வேதனுயகிக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கையும், கந்தையா மகள் வேதனுயகிக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று சறுப்பிட்டி இறை 'பெரிய வயல் அடைப்பனை வயல்' நெற்பபரப்பு 50 இதற்கு எல்லை கிழக்கு கயிலாயர் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் சிவசம்பு சிற்றம்பலத்துக்கும் மளவராயர் கந்தையாவின உரிமையாளருக்குமுரிய ஆதனம், வடக்கு மளவராயர் கந்தையாவின உரிமையாளருக்குமுரியஆதனம், மேற்கு கதிரவேலு பெண நல்லபிள்ளைக்கும் மளவராயர் கந்தையாவின் உரிமையாளருக்குமுரிய ஆதனம, தெற்கு முத்தம்பிப்பிள்ளை குமாரசாமிக்குரிய ஆதனம், இதில் பிரிவிடடபடாத சரி பாதிப்பஙகு.

20, பெருமாள் கோவில் நா. ஸ்ரீஇரங்கநாதன்
வடக்கு ஒழுங்கை கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்,
யாழ்ப்பாணம். 17-3-72 எம் 6 7 4-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழககு இல: M. B. 12090

1. நரசிங்கபிள்ளை நடராசாவும் மனைவி 2. புவனேஸ்வரி
3. இலஙகைநாயகம மகேசனும மனைவி 4. நகுலேஸ்வரி
மயிலிட்டி வடககு மயிலிட்டி —வழககாளிகள்

எதிராக

1. கதிரன் மாணிக்கமும மனைவி 2, சின்னுச்சியும் ஊறணி, தையிட்டி, காஙகேசன்துறை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12090ம் இலக்க வழககில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும ஒரு துண்டுக்காணியை 1972ம் ஆண்டு வைகாசி மாதம் 3-ந் திகதி (3—5—72) புதன்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா F4 0/-ம், 16-10-70 தொடககம் 11—7—71 வரைக்கும ரூபா 4000/-ச்கு நூற்றுக்கு வருஷம 12% வட்டியும் பின் திகதி தொடககம் முழுத தொகையும இறுபடும வரைசகும நூற்றுககு வருஷம் 5% வடடியும கோட்டுச் செலவு ரூபாய் 461ம் 85 சதமும இதில் கொடுககப் பட்ட ரூபாய் 200/- தவிர்த்து

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிச் கோவிறபறறு மயிலிட்டி "கூகை மாவடி' நிலப்பரப்பு வரகுச் செயகை இரணடு (2 Lms. V. C) எலலை கிழசகு நனனியன் கதிரவேலுவினதும பெண வள்ளியினதும் ஆதனம், எலலை வடக்கு மகேசனின் பெண் நகுலேஸ்வரியினதும் நடராசாவின் பெண் புவனேஸ்வரியினதும ஆதனம், மேற்கு செபமாலை அந்தோனிமுத்துவின் ஆதனம, தெற்கு ஒழுஙகையும் வல்லிபுரம் நாகலிஙகத்தினதும், வேலுப்பிள்ளை சீனிவாசகத்தினதும் ஆதனஙகள, இந்த எல்லைகளுககுள் அடங்கியதும, கிழக்கெல்லைக் காணிக்கு போவதற்கு 3 அடி அகலப் பாதை பாவிப்புரித்தும் தெறகெல்லை ஒழுங்கைக் கூடாகவும் தெற்கெல்லை கரையோரமாகவும புற நீஙகலாக்கி மிகுதி முழுவதும்.

நித்தியகல்யாணி" அ. சிவானந்தன்
பலாலி றோட், கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
3—4—72 எம். 14 7—4—72

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 7-4—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்